
# ஆத்மஜோதி



"பானுவும் வேதியும்போற் பார்த்தும் பரிசித்தும்
ஞானபந்தன் தானுக்கினன்."



ஓம்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்.


| சோதி 6 | ஜய௵ வைகாசிமீ 1-ந் திகதி | சுடர் 7 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | திருஞானசம்பந்தர் தோத்திரம் | 169 |
| 2 | தமிழ் செய்த அற்புதங்கள் | 170 |
| 3 | கடவுளைக்காட்டிய கடவுள் | 171 |
| 4 | மங்கையர்க்கரசியார் | 174 |
| 5 | சமயத்திலுள்ளது நீறு | 177 |
| 6 | கனவிலும் வேண்டாம் | 179 |
| 7 | கௌரி அம்மையார் | 180 |
| 8 | பள்ளிகளில் சமயபோதனை | 183 |
| 9 | வையம் விளக்கிய மதிகள் இரண்டு | 185 |
| 10 | உத்தம சித்தர் தம் மகத்துவம் | 186 |
| 11 | மரியாதை வேண்டும் | 192 |
| 12 | தர்மமா? | 194 |
| 13 | சன்மார்க்கமே.......... | 195 |



### ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75. வருட சந்தா ரூ. 3.

தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

*60, டில் பிளேஸ். கொள்ளுப்பிட்டி, கொழும்பு*

பதிப்பாசிரியர்:– நா. முத்தையா

*ஆத்ம ஜோதி நிலையம். நாவலப்பிட்டி [சிலோன்]*

உ

# ஞானசம்பந்த செல்வமே!

# எனது சற்குருவே!

உயிரனு பவமுற் றிடிலத னிடத்தே
ஓங்கருள் அனுபவ முறுமச்
செயிரினல் அனுப வத்திலே சுத்த
சிவவனு பவமுறும் என்ருய்
பயிலுமூ வாண்டிற் சிவைதரு ஞானப்
பான்மகிழ்ந் துண்டு மெய்ந்நெறியாம்
பயிர்தழைத் துறவைத் தருளிய ஞானசம்
பந்தனென் ருேங்குசற் குருவே!

தத்துவ நிலைகள் தனித்தளி ஏறித்
தனிப்பர நாதமாந் தலத்தே
ஒத்ததன் மயமா நின்னை நீ யின்றி
உற்றிடல் உயிரனு பவமென்
றித்துணை வெளியின் என்னை என்னிடத்தே
இருந்தவா றளித்தனை யன்ரே
சித்தநற் காழி ஞானசம் பந்த
செல்வமே! எனது சற்குருவே!

வருபகற் கற்பம் பலமுயன்ருலும்
வரலருந் திறனெலாம் எனக்கே
ஒருபகற் பொழுதில் உறவளித் தனைநின்
உறுபெருங் கருணையென் னுரைப்பேன்
பெருமண நல்லூர்த் திருமணங் காணப்
பெற்றவர் தமையெலா ஞான
உருவடைந் தோங்கக் கருணைசெய் தளித்த
உயர்தனிக் கவுணிய மணியே!

# தமிழ் செய்த அற்புதங்கள்.

அருள் பெறுக. அருள் அற்புதஞ் செய்யும். அற்புதஞ் செய்ய அருளைக்கூவாதே. அது பேராசையாகும். அருளுக்குப் பாத்திரமாயிரு. அடியார் அற்புதம் செப்படி வித்தையல்ல; ஆங்காரப் பொரிவாணமல்ல. அது திருவருள் விளக்கம். ஏசுநாதர் பேயோட்டினார், பிணி நீக்கினார். ஆணவப்பேயை ஓட்டு, ஆசைநோயை நீக்கு, திருவருளுக்குப் பாத்திரமாவாய்.

அப்பர் அரவந்தீண்டிய அப்பூதிமகனை யெழுப்பினார். சம்பந்தர் திருமருகலில் அரவந்தீண்டி யிறந்த ஒரு காதலனை எழுப்பிக் காதலியின் சோகந்தவிர்த்தார். கூன்பாண்டியனின் வெப்புநோயைத் திருநீற்றால் தீர்த்தார். மனமாயத்தை நீறு செய்து பூசினால் காமக்குரோதாதி வெப்பு நோய்கள் தீரும். சம்பந்தர், செத்துச்சாம்பலான பூங்கோதையை எழுப்பினார். திருவருட் சக்திபாய்ந்தால் செத்தார் எழுவர். சுந்தரர் கட்டளைபாடி, இழந்த கண்ணைப் பெற்றார். அருள்பெற்ற திருவடியார் தமிழ் அற்புதஞ் செய்தது.

அன்பனே! மனத்தை மாசற்ற பிள்ளைபோலாக்கு; ஆர்வப்பசிகொள். 'அம்மையே அப்பா' என்று ஆருயிர்த் தந்தையைக் கூவு. அவன் தனது ஞானப்பாலையூட்டி உன்னை ஆட்கொண்டு ஞானசம்பந்தனாக்குவான். நீ கைத்தாளம் போட்டுத்துதி; அவன் பொற்றாளம் அளிப்பான். நீ காலால்நடந்து திருத்தலம் புகு; உனக்கு முத்துப் பல்லக்கு அனுப்புவான். ஆனால் பல்லக்கு ஏறவேண்டுமென்ற ஆசையுடன் அவனை வேண்டாதே. இறைவனைத்தவிர வேறொன்றும் விரும்பாதே. அவனை அடை; அனைத்தும் தம்மால் எய்தும்.

சுத்தானந்த பாரதி

# கடவுளைக் காட்டிய கடவுள்.

(ஆசிரியர்)

திருஞானசம்பந்தப் பெருமானை கடவுளைக் காட்டிய கடவுள் என அழைப்பது சாலப்பொருத்த முடைத்து. பக்குவர்கள் கடவுள் காட்சி பெற உதவ அவர் என்றும் இருப்பவர். சீகாழியில் பருவுடல் தாங்குவதற்கு முன்னும் இருந்தவர்; நல்லூர்த் திருமண நிகழ்ச்சியில் சோதியுள் நுழைந்த பின்னும் இருப்பவர்.

சிவஞான சம்பந்தன், திருஞான சம்பந்தன் ஞானசம்பந்தன் என்ற திருப்பெயர்கள் 'சம்பந்தன்' என மாறியது, சுருங்கக்கூறுதல் என்னும் முறையை மாத்திரம் தழுவி வந்ததன்று. பெருமான் அருளப்பிராட்டியார் அளித்த சிவஞானத்திற்கு மாத்திரமன்றி, சிவானந்தம், ஆனந்தாதீதம் ஆகியவற்றிற்கும் உரிமை பூண்ட தலைமையையும், அவற்றைப்பிறர்க்கும் உணர்த்தி உரிமைசெய்விக்கும் மாட்சியையும் விளக்கிநிற்பதாகும். அதாவது, திருஞானமென்னும் இறை ஞானத்துடன்சம்பந்தங்கொள்ள விரும்புவோர் யாவர்க்கும் அவர் எப்போதும் வழிகாட்டியாயிருப்பவர் என்பதாம். இந்த உண்மையானது அவர் அருளிய 'தோடுடைய செவியன்' என்னும் முதல் தேவாரத்திலேயே மிகவும் நுட்பமாய் அமைந்துள்ளது. சிவத்தில் அதீதப்பட்டு நின்ற தன்மையினர் என்பதனை 'என்னுள்ளங்கவர் கள்வன்' என்பதனாலும். பிறர்க்கும் அதனைக்காட்டும் வன்மை உடையார் என்பதனை 'பெம்மான் இவனன்றே' என்பதனாலும் காண்க.

'குருராயன்' என்பது பிள்ளையாருக்குப் பின்னுளில் தோன்றிய காரணப்பெயர்களுள் தலைசிறந்ததொன்றாகும். நெடுங்காலம் சாஸ்திரங்களைக்கற்றுத் தேர்ந்து பல சாதனைகளையும் பயின்று ஆசாரியத் தன்மை பெற்றோர்க்கெல்லாம் அவர் ஞானசாரியர் என்பதும், வேதாகமங்களை ஓதாமலே முற்றுமுணர்ந்த பரமாசாரியர் என்பதும் இக்காரணப்பெயரால் தரப்படுகின்றன. அதுமாத்திரமன்றி, அவர் வடநூல், தமிழ் நூல் இரண்டிற்கும் உரியார் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. "மறைப்புலவன், சுத்தன், தமிழ்க்குரிசில், சீகாழிச்சம்பந்தன்" என்பது கண்ணுடைய வள்ளலார் தந்துள்ள வர்ணனையுமாகும்.

அரனுக்கும் அகத்தியனுர்க்கும் உபதேசித்து, ஆசாரியத்தலைமை பூண்ட குமாரசற்குருவின் அவதாரமாகப்பிள்ளையாரைப் பாராட்டிச் சில பக்தர்கள் பாடியுள்ளார்கள். அதனை உபசாரமாகக்கருதுபவர்பலருளர். மூன்ரும் வயசில் அவரது திருவுருவைக்கண்ட சீர்காழி மக்கள் வியந்து மகிழ்ந்த காட்சியை விளக்கும்:

*"மறையவர் திருவே வைதிக நிலையே வளர் ஞானப்*
*பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்*
*துறைபெறு மணியே சுருதியினெளியே வெளியே வந்*
*திறைய வனுமையா ளுடனருடர வெய்தினை யென்பார்"*

சேக்கிழார் பாடலை உள்ளூன்றி நோக்கும்போது, பிள்ளையார் தமது முன்னுருவாய, 'ஆயிரங்கோடிகாமர் அழகெலாந்திரண்டொன்ருய' 'மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும் மூலகாரணமாய' தெய்வத் திருவுருவையே காட்டி நின்றனர் என்பது தெற்றெனவிளங்கும்.

சம்பந்தப் பெருமானை ஞானுசாரியராகவும், உலககுருவாகவும் பேணும் முறை தமிழ் நாட்டில் அவர் காலத்தில் இருந்தே வழக்கில் இருந்துள்ளது. அப்பர் சுவாமிகளே அதை அரம்பித்து வைத்தனரெனத்தயங்காமற்கூறலாம். அக்குருவழிபாட்டுத்திறம் அருகத்தொடங்கும்போதெல்லாம் பெரியார்கள் தோன்றி அதனை மறுபடியும் வற்புறுத்தியுள்ளார்கள். இத்தொண்டு செய்தவர்களுள் நம்பியாண்டார் நம்பி, கண்ணுடைய வள்ளலார், சிவஞானவள்ளலார், சிதம்பர சுவாமிகள் முக்கியஇடம் பெறுகின்றனர். தமிழ் நாட்டில் குருவின் பீடத்தை சித்தாந்த சாஸ்திர நூல்கள் அபகரித்த காலம் பதினெட்டாம் நூற்ருண்டு சாதனையற்ற சாஸ்திரப் படிப்பும், வெறும் வாதமும், வேதாந்த–சித்தாந்தச் சண்டையும் மலிந்திருந்ததைக்கண்டு சமரசச் செல்வராம் தாயுமான சுவாமிகள்,

*"வெம்பந்தந் தீர்த்து உலகாள் வேந்தன் திருஞான*
*சம்பந்தனை யருளாற் சாருநாளெந்நாளோ!"*

என்று அழுதார், அவர் அன்றுஅழுதது தம்பொருட்டன்று, சைவர்களாகிய தமிழர்களுக்காகவேயாம், அவருடன் கூடிஅவர்கள் அழவுமில்லை; அவர் உபதேசங்கட்குச்செவிசாய்க்கவுமில்லை. அடுத்த நூறு வருஷ எல்லைக்குள், அருகி வந்த குருவழிபாடு தமிழ்நாட்டைவிட்டு முற்றிலும் மறையத் தொடங்கியது.

இந்தப் பரிதாப நிலையைக் கண்டு கலங்கிய இராமலிங்க சுவாமிகள் முருகனை வழிபடு தெய்வமாகவும், திருஞான சம்பந்தரைக்குருவாகவும், திருவாசகத்தைத் தமது சாதனை நூலாகவுங் கொண்டு அருந்தொண்டு செய்தார். அவர் அடைந்த பேறெல்லாம், பெருமையெல்லாம், சம்பந்தரைக் குருவாகக் கொண்டதனுலேயாம் என்ற உண்மையை அவரே தமது பாடல்கள் மூலம் உலகிற்கு நன்கு அறிவுறுத்தியுள்ளார். இராமலிங்கரைப்போல் சம்பந்தரைப் போற்றிப் புகழ்ந்து பாடி உருகியசைவன் அவருக்கு முன்னும் இருக்கவில்லை, பின்னும் இருக்கவில்லை.

*"என்னுயிர்த் துணையே யெனறிவே யெனறிவூ*
*டிருந்த சிவமே யெனன்பே*
*என் தெய்வமே எனது தந்தையே எனையீன்*
*றெடுத்த தாயே யெனுறவே*
*என்செல்வமே எனது வாழ்வே என் இன்பமே*
*என்னருட் குருவடிவமே"* என்றும்

*"கலகமன முடைய என்பிழை பொறுத்தாட்கொண்ட*
*கருணையங் கடலமுதமே*
*காழிதனி லன்றுசுரர் முனிவர்சித்தர்கள் யோகர்*
*கருது சமயாதியர்களும்*
*கைகுவித் தருகுநின் றேத்த மூவாண்டிற்*
*களித்து மெய்ப் போதமுண்டு*
*கனிமதுர மொழுகு செம்பதிகச் செழும் சொன்மழை*
*கண்ணுதற் பவளமலையில்*
*கண்டு பொழி அருணமுகிற் சம்பந்த வள்ளளாம்கடவுளே*
எனவும்*

அவர் உள்ளத்திலிருந்து பெருகிய ஆர்வத்தை யார்தான் விபரிக்க முடியும்? அம்மட்டோ! சம்பந்தரைக் குருவாக அடைந்து அவரருளைப் பெறும் வழியைக் கூட அவர் நமக்குத் தெளிவாகக் காட்டியுள்ளார்:

*"சைவந்தழைக்கத் தழைத்தாண்டி- ஞான*
*சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண்டி*
*பொய்வந்த உள்ளத்திற் போகாண்டி- அந்த*
*புண்ணியன் பொன்னடி போற்றுங்கடி"*

*என்பது அவர் அருள் வாக்கு.*

நமது உள்ளத்தில் பொய், பொருமைகளைக் கடிந்து, மெய்யையும் அன்பையும் நிலைநாட்டி, அப்படி வாழ்வதன் மூலம் அங்கே சம்பந்தப் பெருமானை எழுந்தருளச் செய்வோமாக!!

# மங்கையர்க்கரசியார்.

[ஆ. சிவலிங்கனார்]

வாழ்வு ஒரு நெடுவழி. வாழ்க்கைப்பாதையில் செல்லுகின்ற கணவனும்மனைவியும் ஒருவருக்கொருவர் துணைவர். 'இல்வாழ்க்கை' என்ற அதிகாரத்தில் இல்வாழ் கணவனைப்பற்றிக் கூறி அடுத்த அதிகாரத்தை **'வாழ்க்கைத் துணை நலம்'** என வைத்த வள்ளுவர் அமைப்பையும் காணலாம். வாழ்க்கைக்குத் துணை ஆதலால் மனைவியை, 'வாழ்க்கைத் துணைவி' என்னுமல் 'வாழ்க்கைத் துணை' என்றேகூறியதையும் நாம் கவனித்தல் வேண்டும். வாழ்வுப்பாதையில் முட்கள் கிடக்கும்: மேடு பள்ளங்கள் இருக்கும்; கவர்த்த வழிகள் கவலைப்படுத்தும். இவற்றை யெல்லாம் தம்மறிவு கொண்டு விலக்கிக் கணவன் மனைவியையும், மனைவி கணவனையும் துணை புரிந்து காத்தல் வேண்டும். நல்ல நெறியில் செல்லும் ஒருவனை அவன் சூழ்நிலை தீய நெறியில் செல்லுத்தவும் கூடும். அவனைத் திருப்புவதும் துணைவன் அல்லது துணைவி கடனும். அவனைத் திருப்பும் போது சூழ்நிலை தடங்கலானுலும் அல்லது முரட்டுப் பிடிவாதத்தால் தன் சொற்கேளாது சென்றுனுலும், துணைவன் காலம் பார்த்திருந்து அது வந்த போது திருப்புதல் வேண்டும். கணவன் தவறிய காலத்தில் மனைவியும் அவ்வாறே திருப்புதல் வேண்டும். அவளே வாழ்க்கைத் துணை ஆவாள். நம் **மங்கையர்க்கரசியாரும்** ஒரு சிறந்த வாழ்க்கைத் துணையாக விளங்கினர் என்பதை இனிக்காண்போம்.

சோழ வேந்தன் மகளாய்த் தோன்றிய **மங்கையர்க்கரசியார்** பாண்டியன் தேவியானர். பாண்டியன் கூன் முதுகுடையவன். தம் கணவனிடத்தில் மிக்க அன்பும் பண்பும் கொண்டு கணவன் நலத்தையே நாடி வந்தனர். அக்காலத்தில் பாண்டிய நாட்டில் சமணர்கள் நிறைந்திருந்தனர். பாண்டிய மரபு சைவ மரபு. சைவசமயத்திருந்த பாண்டியன் சமணசமயத்தைத் தழுவியதோடன்றிச் சமண முனிவர் விருப்பப்படியே நாட்டையும் நடத்தி வந்தான். சைவக் கோயில்கள் பல சமணக்கோயில்களாயின. சைவர்கள் சமணர்களாயினர். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழியினர் தாமே. மங்கையர்க்கரசியார் சமயம் மாறவில்லை. மந்திரியார் குலச்சிறையாரும் நம் அம்மையாருமே சைவ சமயத்தைப் பின்பற்றியிருந்தனர். அம்மை

யார் சைவநெறியே சிறந்தநெறியெனக்கண்டமுடிபினர்: ஆதலினால் தம் கணவன் சென்ற சமணசமயத்தைத் தீநெறி எனக்கொண்டார். அதனால் கணவனை எவ்வகையிலேனும் மீண்டும் சைவ நெறியில் திருப்ப எண்ணினர். தமது எண்ணத்தைக் கணவனிடம் வெளிப்படுத்தவில்லை, வெளிப்படுத்தினாலும் பயன் படாது என்பது அவருக்குத் தெரியும். தக்க சமயத்தில் வெளிப்படுத்தி மாற்றலாம் எனக்காலாம் பார்த்திருந்தார். காலமும் வந்தது.

**திருஞான சம்பந்தர்** திருமறைக்காடு என்னும்ஊரில் **திருநாவுக்கரசருடன்** வந்திருப்பதனைக் கேள்விப்பட்டார் அம்மையார். சம்பந்தர் மூன்றும் வயதிலேயே உமையம்மை பாலூட்ட உண்டதும், பிறவும் ஆன சிறப்பு நிகழ்ச்சிகளை யெல்லாம் கேட்டறிந்து, 'காணும் பேறு என்று வாய்க்குமோ' என இருந்த அம்மையார் கேள்விப்பட்ட உடனே அமைச்சர் குலச்சிறையாருடன் கலந்து எண்ணிச் சம்பந்தரை அழைக்கத் தூதுவிட்டார். சென்ற தூதுவரும் ஞானசம்பந்தரிடம் மங்கையர்க் கரசியார் குலச்சிறையார்களின் விருப்பினைத்தெரிவித்து வணங்கினர். ஞானசம்பந்தரும் உடன்பட்டு அப்பரிடம் விடைபெற்றுப் பல தலங்களையும் வணங்கிக்கொண்டு மதுரை எல்லையை அடைந்தார். அடைந்தது கேட்ட அம்மையார் குலச்சிறையாரை நோக்கிச் 'சென்று எதிர் கொள்க' என்றார். குலச்சிறையாரும் சென்று சம்பந்தரை எதிர் கொண்டு வணங்கினர். சம்பந்தரும் அமைச்சரையும் அம்மையாரையும் நலம் வினவினர். அம்மையாரும் தம் கணவனிடம் விடைபெற்றுச் சம்பந்தரைக் காணவந்தார். சம்பந்தர் ஆலவாய் இறைவனை வணங்கி வருகையில் அம்மையார் வணங்கி அருள் பெற்றனர். பின்னர் குலச்சிறையார் மடம்காட்ட அம்மடத்தில் சைவப்படையுடன் சம்பந்தர் எழுந்தருளினர்.

இப்பால் சமணர்கள் சம்பந்தர் வரவினை அரசனுக்கு அறிவித்துச் சம்பந்தர் மடத்தில் தீவைக்க ஆணையும் பெற்றுச் சென்றனர். பாண்டியன் கவலை தோய்ந்த முகத்துடன் அமளிக்குச் சென்றான். இரவு நேரம் அம்மையாரும் அரசனிடம் வந்தனர் அரசன் வாட்டம் கண்டு,

> **"என்னுயிர்க் குயிராயுள்ள இறைவ! நீ உற்றதென்னோ?**
> **முன்னுள மகிழ்ச்சியின்றி முகம் புலர்ந்திருந்தா யின்று**
> **பன்னிய உள்ளத் தெய்தும் பருவரல் அருள் செய்"**

என்றார். அரசனும்,

> "காவி நீள கண்ணினாய்! கேள் காவிரி நாட்டில் மன்னும்
> தாவில் சீர்க் கழுமலத்தான் சங்கரன் அருள்பெற்றிங்கு
> மேவினன் அடிகள் மாரை வாதினில் வெல்ல"

என்று கூறி, "அச்சங்கரன் அடியவர்களைக் கண்டதால் சமணமுனிவர்கள் கண்டுமுட்டானார்கள்; அவர்கள் அதனைக்கூறியதைக் கேட்டதால் யானும் கேட்டு முட்டானேன்; இதுவே கவலைக்குக் காரணம்" என்றான். அம்மையாரும் அரசனைத்தேற்றுவாராய்உள்ளத்து மகிழ்ச்சி கொண்டு, "அவ்வாறு இரண்டு சமயத்தாரும் வாது புரிவாரேயானால் வென்றவர் பக்கம் நாம் சார்வோம்; இதற்காகக் கவலையுற வேண்டியதில்லை" என்றார்.

அரசன் ஆணைபெற்றுச் சென்ற சமணர்கள் சம்பந்தர் மடத்தில்தீ வைத்தனர். அடியவர்கள் அல்லலுற்றுச் சம்பந்தரிடம் வேண்ட சம்பந்தர் குடிகள் தவறுக்கு அரசனே பொறுப்பாளியாதலின் "பையவே சென்று பாண்டியர்க்காக" என அத்தீயினுக்கு ஆணையிட்டனர்.

> பாண்டிமா் தேவியார் தமது பொற்பில்
> பயிலு நெடு மங்கலநாண் பாதுகாத்தும்
> ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்
> அரசன்பால் அபராத முறுதலாலும்
> மீண்டு சிவ நெறியடையும் விதியினாலும்
> வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
> தீண்டியிடப் பேறுடைய னாதலாலும்
> தீப்பிணியைப் "பையவே செல்க" என்றார்.

இவ்வாறு "பையவே செல்க" எனத்தீயினுக் காணையிட்டதற்குக் காரணம் கூறினார் சேக்கிழார். தீயும் பாண்டியனைப் பற்றியது. வெப்பு நோய்க் காற்றாது துன்புற்றான். சமணர்கள் மணிமந்திர மருந்துகளால் முயன்றும் நோய் நீங்கியபாடில்லை. இனி அவர்களால் ஒன்றும் இயலாதென்றுணர்ந்தான் அரசன்,

(தொடரும்)

# சமயத்திலுள்ளது நீறு.

[முத்து]

சைவ ஒழுக்கங்களுள் முதன்மையானது திருநீறு அணிதல். அதை அணியும்போது சிவபிரானை நினைத்தலும் திருவைந்தெழுத்தை உச்சரித்தலும் அவசியமானவை.

*"திருவாய் பொலியச் சிவாயநமவென நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீ"* என்கிறார் நாவுக்கரசர்.

"வாயே வாழ்த்துகண்டாய்" என்று கூறிய அப்பரே வாய், திருவாய் ஆவதற்கும் திருவாய் பொலிவடைவதற்கும் வழிசொல்லுகின்றார். சிவாய நமவெனச் செல்லிவிட்டால் வெறுவாய், திருவாய்ஆகி விடுகிறது. அத்துடன் பொலிவடைந்து விடுகிறது. வாய்க்குப்பொலிவுயாது? அழகு பெறுதல்; மங்கலமாதல்; நீடுவாழ்தல்.

மனிதன் தன்னுடைய அழகிலே நம்பிக்கை யற்றவனாயபடியினால்தான் மேலைத்தேசத்து நாகரீகப்பொருட்களினால் செயற்கையழகைத்தேடுகிறான். சிவாய நமவெனநீறணிந்தால் அழியா அழகு பொலிந்து விடுகிறது. உள்ளிருந்தே அழகுமலர்கிறது. செயற்கையழகு. நாடகத்திற்கு வேஷம்போட்டவனை அதேமுகப்பூச்சுடன் காலையில் பார்த்தால் எப்படிக்காட்சி கொடுப்பானே, அதைப்போன்றது.

நாம் பிறருக்கு ஏதாவதுஉதவி செய்திருந்தால் அவரிடம் உதவி பெறுவதற்கு ஒரு அன்புரிமையுண்டு. உதவி செய்யத்தான் வேண்டுமென்று வற்புறுத்தவும் தைரியமுண்டு. இதே தைரியத்தைக்கொண்டு அப்பர் "தருவாய் சிவகதி நீ" என்கிறார். அப்பருக்கு என்ன உரிமையுண்டு? திருவாய் பொலியச் சிவாயநமவென நீறணிந்த அன்புரிமையுண்டு.

> **"மங்கையர்க்குத் தனியரசி வளவர்குலக் கொழுந்து
> மன்னவர் சூழ் தென்னவர்க்கு மாதேவி யார்மண்
> சங்கைகெட வமண்சமயஞ் சாட வல்ல
> சைவசிகா மணிஞானத் தமிழிற் கோத்த
> பொங்கு திரு வருளுடைய போத வல்லி
> பொருவி னெடு மாறனார் புயமேல் வாழுஞ்
> செங்கமல முலையாட னருளா லின்பஞ்
> சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்தவாறே."**

ஆண்டவன் மூக்கைப்படைத்தான் சுவாசிக்க, காதைப்படைத்தான் கேட்க, கண்ணைப்படைத்தான் பார்க்க, இப்படியே ஒவ்வோருறுப்பும் ஒவ்வொரு தொழிலால் மனிதனுக்குப் பயன் படுகின்றன. மனிதனும் அப்படியே பயன்படுத்துகிறுன். அப்படியானுல் நெற்றியை ஏன்படைத்தான் என்றெருகேள்வி எழும்புகிறது. ஆழ்ந்து யோசியுங்கள்: அலசிப்பாருங்கள். நெற்றியைப்படைத்தான் விபூதி தரிக்க. அதனுல் தானே "நீறில்லா நெற்றிபாழ்" என்று பாடப்பெற்றது.

காது கேளாதவனும் வாழ்க்கை நடத்துகிறுன்; கண்ணில்லாதவனும் வாழ்க்கை நடத்துகிறுன். காது கண் உள்ளவர்களிலும் பார்க்க மிக நன்கு வாழ்க்கைநடத்துகின்ற குருடரையும் செவிடரையும் பார்க்கின்றேம். ஆனுல் விபூதியை மறந்து வாழ்பவன் தன்னையே மறந்து வாழ்கின்றுன். தன்னையாரென்று தெரியாதவன் குருடன் தானே. புறக்குருடு அல்ல; அகக்குருடு.

*"முகத்துக் கண்கொண்டு பார்க்கின் றமூடர்கள்*
*அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்."*

அகக்கண்ணை வெளிச்சமாக்குவதுதான்விபூதி. ஆனபடியினுலேதான் சம்பந்தப்பெருமான் "சமயத்தில்உள்ளது நீறு" என்றுர். அதாவது சைவசமயத்தில் உண்மையானது திரு நீறு என்றுர்.

உண்மைக்கு நிறம் வெண்மை. வெளித் தோற்றத்திலேயே அதன் பெருமை விளங்குகிறது. உயர்ந்த பொருளை உயர்வான இடத்திலே வைத்தல் தானே மரபு. நெற்றியிலும் பார்க்க உயர்வான இடம் எதைச் சொல்ல முடியும்?

சமணர்களுக்கு விபூதித் திருக்கோலத்தைக் கண்டால் கண்டு முட்டு; சிவாயநம என்பதை உச்சரிக்கக்கேட்டால் கேட்டு முட்டு; விபூதி பொருளற்றது; உண்மைப் பொருளை விளக்க முடியாதது' என்று மனமாறுபாடு கொண்டிருந்தார்கள். கூன்பாண்டியனுடைய வெப்பு நோயை, ஏற்ற தருணத்தில் நீக்கியது விபூதியே. அத்தருணத்திலே தான் சம்பந்தப்பெருமானின் திருவாயினின்று "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் திரு நீற்றுப்பதிகம் எழுந்தது. இன்றும் அப்பதிகத்தை முறையாக ஓதி கிராமத்து ஜனங்கள் விபூதியிட்டு நோய் தீர்ப்பதைக் கண்கூடாகக் காண்கிறேும். நாவுக்கரசரின் சூலை

# கனவிலும் வேண்டாம்.

எடுப்பு.

கடைக்கண்வீச் சிலேதூய கருத்தையெல் லாம்மாய்த்திடும்
கணிகையர் உறவென்றன் கனவிலும் வேண்டாமையே!
[கடை]

தொடுப்பு.

அடைக்கலம் என்றடைந்த அடியார் இடர்துடைத்துள்
நடிக்கும்பொன் னம்பல நாதா! குஞ்சிதபாதா! [கடை]

முடிப்பு.

அல்லிலும் பகலிலும், சொல்லிலும் செயலிலும்,
அகத்திலும் புறத்திலும், சுகத்திலும் துயரிலும்
எல்லையில் லாதநின் இன்னருளையே கண்டு
இதயங் களிக்கும்ஆத்ம சுதந்த்ரர் உறவேவேண்டும்!
[கடை]

"பரமஹம்ஸதாஸன்"

---

முற்பக்கத் தொடர்ச்சி:-

நோயைத்தீர்த்ததும் திலகவதியாரால் இடப்பெற்ற விபூதியே. ஆதலால் விபூதி ஏற்ற தருணத்தில் மக்களுக்கு மருந்து போல் உதவுகிறது. இக்கருத்துக் கொண்டும் "சமயத்தில் உள்ளது நீறு" என்றார்.

ஒருவர் தரிக்கும் விபூதி அவருக்கு மாத்திரமன்று; அவரைத்தரிசிக்கும் யாவர்க்கும் நன்மைபயப்பது. விபூதி தரித்த ஒருவரைக் காணும் போது அவர் ஒரு சிவனடியார் என்பதை எமக்கு நினைவூட்டுகிறது. இறைவனுடைய திருவடியை நோக்கி யாத்திரை செய்யும் எமது சகோதரர் என்ற மனோபாவத்தையும் உண்டாக்குகிறது. அது மாத்திரமல்ல; உலகில் கண்ணுக்குத் தெரியும் பொருட்களெல்லாம் அழியுந்தன்மை உடையன; "முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பராவர்" என்ற தத்துவத்தையும் விளக்கிக் கொண்டிருக்கிறது. பசுவின்மலம் அக்கினிபட்டுப் பரிசுத்தமானதுபோல ஆன்மாவைப்பீடித்த மும்மலகாரியம் ஞானாக்கினியினால் எரிக்கப்பட்டுப் பரிசுத்தமாகும் என்பதையும் விளக்குகின்றது. இதுவே தான் முத்திக்கு உபாயமும். ஆதலால் சமய உண்மைப்பொருளாகிய விபூதியை யாவரும் மறவாதிருக்க வேண்டுகிறோம்.

---

# கௌரியம்மையார்.

கூட்டினின்றும் விடுபட்ட கோளரி போன்றுணர்ந்த மிருடானியார், நண்பரும் உறவினரும் தமை வறிதே மீளும்வரை சின்னுள் கங்காசாகரத்தே தங்கிப் பின் ஹரித்துவாரத்திற்குச் சென்று கொண்டிருந்த சாதுக்களோடும் துறவு பூண்டசில கன்னியரோடும் சேர்ந்து, தமது யாத்திரையைத் தொடங்கினர். இக்காலத்தே தான், வண்ணத்தாலும் எழிலாலும் மலையரசனின் மகளை ஒத்திருந்தமையால் அவர்க்குக் கௌரிமா, (கௌரியம்மை) என்னும் பெயர் அமையலாயிற்று. இடைவழியிலே யாத்திரீகர் வட இந்தியாவிலுள்ள பல தலங்களைத் தரிசித்து, இறுதியில் ஹரித்துவாரத்தையும் ஹ்ருஷிகேசத்தையும் சார்ந்தனர். ஆங்கே இமயமலையின் இயற்கையழகும், தனிமையின் இனிமையும் தூய்மையின் செறிவும், முனிவரிணக்கமும், புனிதகங்கையும் அம்மையாரின் நெஞ்சைக் கவர்ந்து, தியானவேட்கையைப் பன்மடங்காக்கின. வாய்ப்புள்ள ஓரிடத்தமர்ந்து, வாழ்நாளை இடையருச்சிந்தனைத்தாரையாக்கி, பரம்பொருட் காட்சி எய்தும் வரை சாதனக்கடலில் மூழ்கி இருக்க விழைந்தார். ஹ்ருஷிகேசத்தினின்றும் புறப்பட்டு, நெடுநாளாகக் காண அவாவிய கேதாரம், வதரி எனும் தலங்களில் இறைவனை வழிபட்டு ஹரித்வாரம் மீண்டு பஞ்சாப் காஷ்மீரம் என்னும் நாடுகளிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்கட்கும், ஆடவர்க்கும் எளிதில் அணுகவொண்ணு உள்மலைகளிலுள்ள கங்கோத்திரி ஜம்நோத்திரி எனும் தூய இடங்கட்கும் சென்றூர். இவ்வண்ணம் மலைச்சாரல்களிலே ஏறத்தாழ மூன்று ஆண்டுகளைக் கழித்தார். தம்மை அறிந்தவர் வலியப் பற்றி இல்லத்திற்கு இழுத்துச் செல்வாரோ என்ற அச்சத்தால் மலைகளைக் கடந்து மைதானங்கட்கு ஏகாது, கடுங்குளிர்ப்பருவத்திலும் மலையடிவாரத்தே தங்கி வந்தனர்.

இவ்வாறு அலையுங்காலத்து அம்மையாரது வாழ்க்கையில் தவமெனும் தீ கொழுந்து விட்டெரியலாயிற்று. பசியும் களைப்பும் குளிரும் உடலைப்பல முறை வருத்தினும், உள்ள உறுதியால் அவற்றைப் பொறுத்துப் பொருட்படுத்தாதொழிந்தார். பன்முறைநெடு வழிநடந்த இளைப்பால் மெய் சோர்ந்து வழியிலே மூர்ச்சையாவார்; எனினும் அன்புடைய மலைநாட்டு மங்கையர் அவரைக்கண்டு,வேண்

டியன இயற்றித் தெளிவிப்பார். தமது உடலழகு யாத்திரை வாழ்க்கைக்கு இடையூருகாத வண்ணம், உடலை விகாரமாக்குமாறு இறைவனிடம் அவர் வேண்டினர். மௌனியாகியும், பித்தரைப் போல நடித்தும், தமது கூந்தலை வெட்டியும், உடல் முழுவதும் மண்ணையுஞ் சாம்பலையும் பூசிக்கொண்டும், இடையிடையே ஆணுடையோடு தலைப்பாகை யணிந்தும், ஊரூராகத் திரிந்து வந்தார். எப்போதும் காவியாடை தரித்தும் ஒருபையிலே காளியின் படத்தையும் கௌராங்கரின் படத்தையும் சண்டி பாகவதம் எனும் நூல்களையும் வைத்தும் தாமோதரச் சிலையைக் கழுத்திலிருந்து ஒரு துணியாற் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டும் அஞ்சாத நெஞ்சுடன் செல்வது வழக்கமாயிற்று.

அனைத்தையுந் துறந்து இறைவனை நாடித் தனிவழியே திரியும் தீரர்க்குச் சோதனையும் இடுக்கணும் பல நேரினும், இறைவன் மீதுள்ள நம்பிக்கையும் அவனது அருளும் மெய்யன்பரது இணக்கமும் நாளும் பெருகி, ஞான நலனை ஓங்குவிக்கும். அம்மையார் தமது உள்ளம் ஒப்பியவாறே பன்னுள் ஓரிடத்தே தங்கி வருவார். பல யாத்திரீகர்களோடு சேர்ந்து செல்ல இயலாது தனியே திரியுங்கால், பல முறையும் அடர்ந்த காடுகளின் நடுவே வழிதவறியும், சங்கடங்கட்கும் ஆபத்துகட்கும் உட்பட்டும், பலவாறு இடும்பைக்கு உள்ளாயினும் மன உறுதியை நெகிழவிடாது, இடும்பைக்கு இடும்பை படுத்தி வரலாயினர். நம்பினுரை நழுவ விடாத விரதமுடைய இறைவனும் அம்மையார்க்கு உற்ற இடத்து (துன்ப சமயத்து) உதவியும், உள்ளத்துத் தன் இருப்பினைப் புலப்படுத்தியும் ஊக்குவித்து வந்தான் ஒருநாள் நெறி விலகி ஒரு பனிமூடிய பாலத்தின் மீது நடந்து செல்லும்போது, அது இற்று வீழ்தலும், அம்மையார் அதோடு கீழோடும் ஆற்றில் விழலானுர்; வெள்ளம் அவரை இழுத்துச் செல்லலும் ஒருபனிப்பாறையால்தடுக்கப்பட்டுவெளியேறினுர். மற்ருெருமுறை மக்கள் வாழாத மலைக் காட்டின் நடுவே தனியாய் அகப்பட்டுத் தத்தளித்து உறை பனியால் உடல் விறைத்து உணர்ச்சியை இழக்கும் தறுவாயில் இருந்தார்; அப்போது மாயமாக எங்கிருந்தோ ஒரு மாது தோன்றி, அவரை வழி நடத்தி ஒருகுடிசைக்கு அழைத்துச்சென்று வேண்டிய சிகிச்சை இயற்றிய பின், மாயமாய் மறைந்தனள். பன்முறையும் உண்மையான ஞானியர் பலரை அம்மையார் கண்டும் அளவளாவியும், தமது ஞான நெறியில் விரைவில் முன்னேறி வரலானுர்.

இமய மலையினின்றும் மேலை நாட்டிலுள்ள தலங்கட்குச் சென்றனர். துவாரகையிலே அவர் சென்ற நாளில், எண்ணிறந்த மக்கள் வாந்தி பேதியால் மரித்து வந்தனராதலின், அவரை அங்கு செல்லாதிருக்கப் பலரும் வேண்டினர்; ஆனால் அவரோ மன்னுயிரை ஓம்பும் அருள் கூர்ந்தவராய், ஊரிலுள்ள பெரியார் சிலரின் துணையை நாடி, ஊர்க்குட் புகுந்து, நோயால் வாடும் மக்கட்கு மருந்தும் உண்டியும் உதவியும், இயன்றவாறெல்லாம் வழங்கும் பணியில் ஈடுபட்டனர். வேறு பல புண்ணிய தலங்கட்கும் சென்ற பின், இறுதியாகத்தமதுஉள்ளங்கவர் கள்வனான பரந்தாமன் வாழும் பிருந்தாவனத்தை நண்ணினர். ஆங்கே கண்ணபிரான் தனது இன்னுயிரன்பராய கோபியரோடு ஆடல் புரிந்த பல இடங்களும், அவரது திருவடிகள் தோய்ந்த புனித மண்ணும் மரமும், கல்லும் புல்லும், அவரது குழலிசை கேட்டு மயங்கி நின்ற பசுவும் பறவையும் யமுனையும் பிறவும் கண்ணாரக் கண்ட அம்மையார் ஆர்வச்செறிவால் கண்ணனது இருப்பைத் தம் உள்ளும் புறமும் உணரலானார்; ஆயினும் கண்ணனது எழில் வடிவைப் புறக் கண்முன் காணும் ஆசை ஓங்கலால், அம்மையார் கோயில் தோறும் யமுனையாற்றின் கரைப்பக்கந்தோறும் கண்டவிடந்தோறும் கண்ணனைத் தேடும் விடாய் முதிரப்பெற்றார்; அவனைக் காணப்பெறாமையால் துடித்தார்; ஆற்றாமையின் மிகுதியால் உயிரைத் துறக்கவும் எண்ணினார். ஒரு நாள் நள்ளிரவில் லலித குண்டம் சென்று, 'கண்ணனைக் காணல் அன்றிச் சாதல்' என்னும் துணிவோடு இருந்தாள்; அன்று கண்ணன் திருவருள் சுரந்தான். மறுநாட் காலை கண்ணும் உள்ளமும் கொள்ளவொண்ணாக் காட்சியெய்திய மாட்சியால் அம்மையார் மூர்ச்சித்துக் கிடக்கக் காணப்பட்டார் மூர்ச்சை தெளிவித்து எழுப்பப் பெற்ற பின்னும், அவர் தனியே சிரித்தும் அழுதும் பொழுது போக்குவார்; சில முறை அவர் உடலெங்கும் காயம் இருக்கவும், மெய் மறந்து தரைமீது கிடப்பாராக, அப்போது ஆனந்தத்தால் விண்மாரி யென்னவே கண்மாரி சொரியா நிற்கும். சுருங்கக்கூறின், ஒரு முறை கண்ணனின் கண்வலையிற் பட்டார், பட்டபாடெல்லாம் அவர்க்கு இயல்பாயிற்று; இன்ப மயமான பிரேமைத் துன்பமே அவர்க்கு உணவாக, அம்மையாரது அன்புடல் நாளும் புது நலன் கிளரலாயிற்று

# பள்ளிகளில் சமயபோதனை.

(குன்றக்குடி அடிகளார்)

இன்றைய இளைஞர்கள் தான் நாளையத் தலைவர்கள். இளைஞர்கள் அவர்களின் தலையாய பொறுப்பை யுணர்ந்து கொண்டு விட்டார்களா என்றால் அதுதான் இல்லை. இன்றையநிலைமையில் உணர்ச்சி வேகத்தில் இளைஞர்கள் தங்கள் சிந்திக்கும் திறனை இழந்து ஒரு சிலரின் வழியில் செல்லத் தலைப்பட்டு விட்டனர். உணர்ச்சி வேகத்தில் நீந்துகின்ற இளைஞர்கள் பழமை அழிந்து புதுமை வளர்ந்து வர வேண்டு மென்று கூறுகின்றனர், புதுமை மகிழ்ச்சிகரமான தாகக் காட்சியளிக்கலாம், பழமையை வெறுத்து ஒதுக்குகின்றவர்கள் புதுமையின் தாயகம் பழமை என்பதை மறந்துவிடக் கூடாது.

இயற்கையாகிய அசலுக்கு நகல் எடுத்தான் மனிதன். ஆனால் அசலுக்கு உள்ளது போன்று நகலுக்கும் உயிரோட்டத்தைக்கொடுக்க முடியவில்லை, போலிகளைக் கண்டு ஏமாந்து விடக்கூடாது, உண்மைகளுக்குள்ள பயனை போலிகள் தரமுடியாது, சாதிச்சண்டை, மதச்சண்டை கூடாது என்று கூறியவர்கள் இன்று கட்சிச் சண்டையில் ஈடுபடுகின்றார்கள். தமிழகத்தின் பழங்கால வரலாற்றைப் படித்துப் பார்த்தால் நாத்தீகத்திற்குத் தமிழ் இலக்கியங்களில் இடமில்லை யென்பது நன்கு தெரியும். தமிழகத்தில் என்றும் கடவுள் கொள்கை இருந்திருக்கிறது என்பதை சிந்துவெளி நாகரீகம் நன்கு விளக்குகின்றது.

இன்று கடவுள் கொள்கைக்குப் புறம்பான கருத்துக்களைப் பரப்புகின்றவர்கள் மேல் நாட்டுச் சரக்குகளைத்தான் சான்று காட்டுகின்றார்கள். அவர்களும்உண்மைச் சமயத்தை வெறுத்தார்கள் இல்லை. அவர்கள் வாழ்ந்த சூழ்நிலை, சுற்றும் புறம், நாட்டின் கலாச்சாரம், பண்பாடு முதலியன நம் நாட்டினின்றும் முற்றிலும் வேறுபாடானவை என்பதை மறந்து விடுதல் கூடாது.

இன்றைய நிலைமையில் மதத்தை எதிர்த்துப் பேசுகின்றவர்களும், மதத்தை அநுட்டிப்பவர்களும் உண்மையான மதத்தை இன்னும் புரிந்து கொள்ளவில்லை. மதத்தின் அடிப்படையில் அன்பு, அருள் சகோதரத்துவம், நீதி, நேர்மை, ஒழுக்கம், முதலியன வளர வழி

உண்டாகின்றது. அதனுல் ஆக்கமேயன்றி அழிவுக்கு இடமில்லை. இங்கு நம்பிக்கைக்குத்தான் இடம், ஆராய்ச்சிக்கு இடமில்லை.

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஓர் எல்லையுண்டு. பள்ளிகளில் சமயத்தின் அடிப்படையில் கல்வி பெறும் வாய்ப்பு இடைக்காலத்தில் போய் விட்டது. மதச் சார்பற்ற சர்க்கார் என்பதை புரிந்து கொள்ளாது வாழ்கின்ருேம். மதச்சார்பற்ற சர்க்கார் என்ற கொள்கையில், தத்துவத்தில் தவறில்லை. ஒரு மதத்தை மட்டும் ஆதரிக்காது, எந்த மதத்தையும் துவேஷமாய்க் கருதாது என்பது தான் அதன் அர்த்தம். ஆனுல், நாத்திக சர்க்கார் இல்லை என்பதை எல்லோரும் நன்குணர்தல் வேண்டும். தனிப்பட்டவர்கள் நடத்துகின்றபள்ளிகளில் நம் குழந்தைகளுக்கு நமது சமயத்தினை நன்குபோதித்தல் வேண்டும். அதனைத்தடுக்க யாருக்கும் உரிமை கிடையாது தடைசெய்வது நியாயமுமல்ல. அரசியல் சட்டம் நிகழ்ந்த குற்றத்தைக்கண்டுபிடிக்கவும் அதற்குத் தண்டனை கொடுக்கவும் தான் பயன் பெறும். ஆனுல் குற்றம் புரிகின்ற தீய எண்ணங்கள் உருவாகின்ற மனத்தையே திருத்தும் தகுதி சமயத்திற்கு உண்டு. அருள்நெறியாளர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் உள்ள வேற்றுமை என்னவென்ருல், அருள் நெறியாளர்கள் தங்களை மறந்து பிறர் வாழ்வில் நாட்டம் செலுத்தி வாழ்ந்தனர். அரசியல் வாதிகள் தன்னலம்கருதி பிறரைத் துன்பத்திற்குள்ளாக்கினுர்கள், கொன்று குவித்தார்கள், என்பதை இருசாராரின் வாழ்க்கை வரலாறுகள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

மதம், சமயம் என்பனவற்றில் இளைஞர்கள் காய்தல் வெறுப்பு இன்றி ஈடுபட்டு வருதல் வேண்டும். அவைகளைப்பற்றி நன்குபடித்தும் பெரியோர்களிடம் கேட்டும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இளைஞர்கள் அழிவுப்பாதையில் செல்லவேண்டாம். ஆக்கத்துறையில் ஈடுபடுதல் வேண்டும். அழிக்கப்படவேண்டிய ஒன்று, மக்கள் மன்றத்தில் விரும்பப்படாத ஒன்று தானுக அழிந்து போகும் அழிப்பதற்கென்று நாம் காலத்தை வீணுக்குதல் கூடாது. எவ்வளவோ நல்ல காரியங்களில் ஈடுபட்டுப் பணியாற்றக் கடமைப்பட்டிருக்கின்ருேம். இளைஞர்கள் தங்களைத் தனிப்பட்டவர்கள் என்று கருதுதல்கூடாது. அவர்கள் சமுதாயமாகியஉடலில் ஒரு உறுப்புப்போன்

# வையம் விளக்கிய மதிகள் இரண்டு.

(குன்றத்தூர் பொன்னரங்கன்)

வையம் என்பது இந்நிலவுலகில் வாழும் உயிர்களின் மேற்று. இவ்வுயிர்கள் அறிவதனை இரண்டு இருள்கள் தடைபடுத்துகின்றன. அவை புறவிருள் அகவிருள் என்பன. புறவிருள் கட்புலனால் அறிவதனைத் தடுக்கிறது. அகவிருளோ மனத்துக்கண் மயக்க உணர்ச்சியை யெழுப்பி மெய்ப்பொருளை விடுத்து பொய்ப்பொருளைப் பின் பற்றச் செய்கிறது. இவ்விருள்களினால் உயிர்களுக்கு உண்டாகும் அறியாமையை நீக்கி அறிவைக் கொளுத்தும் செயல் விளக்கம் எனப்படும்.

இனி இவ்விருள்களைப் போக்கி, தன்னால் படைக்கப்பட்ட உயிர்கள் விளக்கமெய்தற் பொருட்டு இறைவன் செய்த திருவருள் தான் என்னே! புறவிருளைப்போக்கப் பகலவனும் மதியுமாகிய இரு சுடர்களை விளங்க வைத்தார். 'சென்றுருளுங் கதிரிரண்டும் விசும்பில் வைத்தார்' என்பது தமிழ்மறை. இது போலவே அகவிருளைப் போக்கி உயிர்கள் பிறவிப் பிணியினின்று விடுபட்டு உய்யும் பொருட்டுச் சேக்கிழார் சுவாமிகளும், கடவுள்மாமுனிவரும் இரண்டு மதிகளை இம்மண்ணுலகிற் கண்டனர். எங்ஙனம் கண்டனர் எனின்?

---

முற்பக்கத் தொடர்ச்சி:-

தங்களில் யார் தவறினாலும் அது சமுதாயமாகிய உடலைத்தான் பாதிக்கும் என்பதை இளைஞர்கள் நன்குணர்தல் வேண்டும். இளைஞர்களை இளமை தொட்டே உயரிய முறையில் உருவாக்குதல் ஆசிரியர்களின் கடமையாகும். ஆசிரியர்களும் இளைஞர்களும் அரசியல் சேற்றில் சிக்காது வாழ்தல் வேண்டும். வாழ்க்கைத்தரமும் மனோபாவமும் விரியவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் எப்பொழுதும் வீணான பிரச்சனையில் தலையிடுதல் கூடாது. அன்பு, அருள், அறம் வளர்க்கப் பாடுபடுதல் வேண்டும். உங்களுடைய மனம் இறைவனிடத்தும், உடல் உழைப்பு மக்களிடத்தும் இருத்தல் வேண்டும். மனம் திருந்தி நன்முறையில் வாழ்ந்து நல்லன பல காணப் பாடுபடுதல் வேண்டும். (மணிமொழி)

பாண்டி நாடு சமணவிருளால் சூழப்பட்டிருந்தது. இதனைப் போக்கியவர் திருஞானசம்பந்தர். அந்நாட்டிலேயே ஆணவமாகிய அதிகாரவிருள் மீதூர்ந்து இருந்த காலம் அரிமர்த்தனன் காலம்: இதனைப்போக்கியவர் திருவாதவூர் அடிகள்.

பாண்டிநாட்டை நெடுமாற பாண்டியன் ஆண்ட காலத்தில், அரசனும் சமண்மேற் கொண்ட காரணத்தினால் சமண விருள் சூழ்ந்து சைவநெறி விளக்கமற்றிருந்தது. இவ்விருளைப்போக்கி நன்நெறி நிலைநாட்டக் கருத்துக்கொண்டு ஆண்டிருந்த இரண்டு சிறந்த சிவ பக்தர்களாகிய பாண்டிமாதேவியாராகிய 'மங்கையர்க்கரசியாரும்' அமைச்சர் 'குலச்சிறையாரும்' திருஞானசம்பந்தப் பெருமானை வரவழைத்தனர்.

அவரும் அதற்கிசைந்து மதுரையம்பதியை யடைந்து அரசியாரும் அமைச்சரும் காட்டிய மடத்தில் தங்கி உடன் வந்த அடியார்களுடன் திருப்பதிகம் பாடிச் சிவத்தொண்டு புரிந்துகொண்டிருந்தனர்.

இவற்றையெல்லாம் புறத்தே இருந்து கவனித்துக்கொண்டிருந்தசமணர்கள் பொருராய் அரசனிடம் ஓடி, 'நம்மை வாதில் வெல்ல சூலபாணிபால் ஞானம்பெற்ற பாலன் தொண்டர் குழாத்துடன் வந்துளான்' என்றுபயந்து கூறினர். அரசனும் பயந்து 'இதனைத்தீர்க்கு உபாயம் யாது?' என, அவர்கள், 'மந்திரத்தொழிலால் அவனிருக்கும் மடத்திற்குத் தீயிட்டால் இந்நகரை விட்டு ஏகுவன்' என்றனர். அரசனும் சிறிதும் ஆராயாமல் அதற்கிசைந்தான்.

பாண்டியன் ஆராயாமற் கட்டளையிட்டது அவன் பின்னர் மெய்யுணர் வெய்திச் சிவநெறிக்கண் திரும்புதற்கே ஏதுவாயிற்று. எவ்வாறெனில் பாண்டியர்களுள் ஒரிருவர் இவ்வாறு முன்னர் ஆராயாமல் அடாது செய்து பிறகே மெய்யுணர்வினைப் பெற்றிருக்கிறார்கள், என்பதனை நூல்கள் வாயிலாக அறிகிறோம். அவர்களையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. கோவலன் மதுரையில் சிலம்பு விற்கவந்த காலத்தில், பொற்கொல்லன் அரசனிடம் அவனைக் கள்வன் என்று சொன்னதும்

அக்காலத்தில் ஆண்டுவந்த பாண்டியன் சிறிதும் ஆராயாமல் அவனைக் கொல்ல உத்தர விட்டான். பிறகு கண்ணகி சீற்றங்கொண்டு வந்து வழக்குரைத்த போதே மெய்யுணர்வு பெற்று, 'பொன்செய் கொல்லன் தன்சொற்கேட்ட யானோ அரசன்? யானே கள்வன்!' என்று கூறி அரசு கட்டிலில் உயிர் துறந்தான்.

2. மண்சுமந்த திருவிளையாடலில் அரிமர்த்தன பாண்டியனும், பெருக்கெடுத்த வைகையைஅடைக்க வந்திக்கு ஆளாகிவந்த சோம சுந்தரக் கடவுளை, மற்ற ஆட்கள் அவர் தமது பாகத்தை அடைக்க வில்லை என்றும், வீண்பொழுது போக்கினார் என்றும் கூறியதைக் கேட்டுப் பசுஞானம் மிகுதியினால் ஆராயாமல் பிரம்பினால் அடித்த னன். அவ்வடி அரசன் உட்பட எல்லா உயிர்களின் மேலும் பட்டு, இறைவன் அசரீரியாக உணர்த்திய பின்பே பதிஞானம் பெற்றான்.

இது போலவே, சமணர்கள் அரசன் கட்டளைப்படி திருஞான சம்பந்தப்பெருமானது மடத்திற்குத் தீயிட்டனர். ஆனால் அவர் ஆல வாய் அண்ணலைப்பாடி அத்தீயைப் 'பையவே சென்று பாண்டியற் காக' என்று பணித்தனர். பெருந்தீங்கிழைத்த மன்னனுக்குத் தீயை ப் 'பையவே செல்க' என்று பணிப்பானேன். ஈண்டுப் பிள்ளையாரது கருணை வெள்ளம் கரைபுரண்டோடியது போற்றற்பாலது. சிவநெறியை நிலை நாட்ட வந்தவர், பொய்ச்சமய சூழலுக்கு முதன்மை யான அரசனுக்கு நன்னெறி காட்டவும், தன்னையழைத்த அன்பர் கள் பொருட்டு வைத்த அன்பினாலும் 'பையவே செல்க' என்றார். இதனைச் தெய்வச்சேக்கிழார் பெருமான்,

*பாண்டி மாதேவியார் தமது பொற்பிற்*
*பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்*
*ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்*
*அரசன்பா லபராத முறுதலாலும்*
*மீண்டுசிவநெறி யடையும் விதியினாலும்*
*வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர்*
*தீண்டியிடப் பேறுடைய னாதலாலுந்*
*தீப்பிணியைப் பையவே செல்கவென்றார்.*

என்று கூறியுள்ளார். ஈண்டுச் சைவசமயத்தின் பரந்த நோக்கமும் சிறந்த அறிவுடைமையும் கருதக் கிடக்கின்றன.

பிள்ளையார் ஏவிய தீ அரசனைத் தீப்பிணியாக அணுகி, சமணர்களால் எவ்வித உபாயத்தாலும் தீர்க்க முடியாத சுரநோயாயிற்று. அரசனும் உணர்வு சோர்ந்தான்.

அவ்வமயம் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பயந்து இது சமணர்கள் புகலிவேந்தர்க்கு இழைத்த தீமையினால் வந்த விளைவு என்றுணர்ந்தனர். இதனை ஒருவாறு துணிந்து அரசனிடம் தெரிவித்து, 'ஞானசம்பந்தரை அழைத்தால், இவ்வுடல் நோயன்றிப் பிறவி நோயும் தீரும்' என்றனர். அரசனும் பிள்ளையாரது பெயரைக் கேட்ட அளவிலேயே உணர்வு பெற்றுளதலால் அவர்கள் வேண்டுகோளுக்கு ஒருவாறு இசைந்தனன்.

உடனே மங்கையர்க் கரசியாரும் குலச்சிறையாரும் சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பையும் கருதி, 'வினைதீர ஞானத்தை நாடித்தொழவே அது நிகழும்' என்று மெய்கண்ட சிவாசாரியார் 12ம் சூத்திரத்தில் 4ம் அதிகரணத்தில் 2ம் உதாரண வெண்பாவில் காட்டியருளியபடி மதுரையில் உச்சநிலையிலிருந்த சமண இருளைப்போக்கவும், உயிர்கள் யாவும் அசத்தைப் போக்கி ஞான சொரூபம் பெறவும், பாண்டியன் சிவநெறியடையவும், நந்தாவிளக்காம் திருஞானசம்பந்தரைச் சென்று கண்டனர். எங்ஙனம் கண்டனர்?

*'ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை*
*வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை*
*தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்*
*கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.'*

இனி ஆணவமாகிய அதிகார இருளை மாணிக்கவாசகர் எவ்வாறுபோக்கினர் என்பதுபற்றிச் சிறிது ஆராய்வாம்:

பாண்டி நாட்டை அரிமர்த்தன பாண்டியன் ஆண்டகாலத்தில் ஆணவ இருள் ஓங்கி குடிகளுக்குப் பல துன்பத்தைச் செய்தது. இவ்விருள் அதிகாரமாக நிலவிற்று என்பது, மாணிக்கவாசகரது வரலாற்றில் அவருக்குப் பாண்டியன் இழைத்த பல துன்பங்களினாலும், இதற்குக்காரணம் மெய்யுணர்வற்ற மற்ற அமைச்சர்களது போதனை என்றும் துணியக்கிடக்கின்றது.

அரசன் இவ்வாறு இருப்பினும் தனக்குத்தக்கஅமைச்சர் இல்லை என்பதை உணர்ந்து பலகலையும் பதினாறுண்டிலேயே திருவாதவூர டிகள் கற்றுணர்ந்தாரெனக்கேட்டு அவரையழைத்து அவருடன் நீங்கா நண்பாயினான். பிறகு அவருக்குத்தக்கபடி முதலமைச்சர் பத வியும் தந்தனன். அப்பதவிக்கேற்ப 'தென்னவன் பிரமராயன்' என்ற பட்டமும் பல்வகை வரிசைகளும் வையம் உய்யும் பொருட்டுத் தந் தனன். அவர் அமைச்சுத்தொழிலை அறஞ் செய்வோருக்கு கவசமும் கண்ணுமாகியும், பகைவர்களுக்கு இடும்பையாகியும், வணங்கியவர் களுக்கு இன்பமாகியும், அறிஞர்களுக்கு அன்னையாகியும் அன்பு செலுத்தித் திறம்பட நடாத்தி வந்தார்.

இவர் இவ்வகையான சிறப்புக்களுடன் மற்ற அமைச்சர்கள் சேனாவீரர்கள் சூழ சைவ சமயத்தின் ஒளி எங்கும் பரக்க வீற்றிருந் தனர், என்பதனைக் கடவுள் மாமுனிவர்,

*'இந்திரச் செல்வம் போல இசைந்துள வின்பமெய்தி*
*மந்திரத் தலைமை பூண்ட வண்புகழ் வாதவூரர்*
*தந்திரத் தொகுதி சூழத் தாரகா கணங்களோடும்*
*அந்தரத்திழிந்து மண்மேல்அமர்ந்த வெண்மதியமொத்தார்'*

என்று கண்டனர்.

புறவிருளைப் போக்கும் விசும்பின் சுடர்கள் போல் அல்லாமல், சேக்கிழாரும் கடவுள் மாமுனிவரும் கண்ட, வானத்தின்மிசையன்றி 'மண்ணில் வளர் மதிக்கொழுந்தும்' அந்தரத்திழிந்து மண்மேல் அம ர்ந்த வெண் மதியமும் ஆகிய திருஞானசம்பந்தப் பெருமானும் மாணிக்க வாசகப் பெருமானும், நம்முடன் இருந்து மெய்யுணர் வினையூட்டிப் பிறவிப் பிணியினின்றும் நீங்கிச் சிவப்பேறடையச் செய்ய வல்லவர்கள்; மதியினது செயல்கள் விளக்கமாத்திரமேயன்றி தட்பமும் வெப்பமும் ஆகிய இன்பமும் துன்பமும் தருவன. காத லால் கலந்தாற்கு இன்பமும் பிரிந்தாற்குத்துன்பமும் நேருவது கண் கூடு. திருஞான சம்பந்தரையும் மாணிக்கவாசகரையும் எதிர்த்தார்க் குத் துன்பமும் சேர்ந்தார்க்கு இன்பமும் எய்தும் பயனாதலால் திரு நீலகண்ட யாழ்ப்பாணர், அரிமர்த்தன பாண்டியன் முதலியவர்களை ப்போல் நாமும் இவர்களைச்சார்ந்து என்றும் வழுத்தி இன்புறுவோ மாக.

# உத்தம சித்தர் தம் மகத்துவம்.

(மு. மயில்வாகனன்)

சென்ற பங்குனி உத்தரத்தன்று கொத்மலைப் பகுதியிலுள்ள குயின்ஸ்பரித் தோட்டத்துக்குச் சென்றோம். அன்று முருக தரிசனம் வாய்க்கப் பெற்றதுடன் அப்பதியின்கண் சமாதிகொண்ட நவநாத சித்த யோகியாரின் விசேஷ அபிஷேகமும் விசித்திர அன்ன சத்திரமும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அடுத்த நாள் குயின்ஸ்பரி வனத்துக்குச் சென்றோம். எங்குந் தண்ணென்ற குளிர்ச்சி: 'சோ' வென்று சோலைமருவிய மந்தமாருதம்: பலவினப்பட்சி ஜாலங்களின் வாய்ச்சாலகம்; இளமரக் காக்கள் ஈந்த தண்ணறும் நீழல்; இருந்து மறைந்த சித்தரின் குகாச்சிரமங்கள்: இதனிடையில் சுவாமி 'கௌரி வாவா' அவர்களின் இனிய தனி ஆச்சிரமமொன்று இவையெல்லாம் மேற்படி வனத்தை வனப்புச் செய்வனவாம். "இனிது இனிது ஏகாந்தமினிது" என்பதற்கு எடுத்துக்காட்டு அவ்விடமேயாகும். அருகமைந்த குன்று ஒன்றில் ஏறிநின்றபோது அது கிறிஸ்து நாதரின் மலைப்பிரசங்கத்தை நினைப்பூட்டியது. இவ்வியற்கை வாசமும் அவண்தோன்றிய அடியார்களின்சகவாசமும் எம் இருதயகமலத்தை விரியச் செய்தன. அதன் கண் தோன்றிய அகக்காட்சியே '**உத்தம சித்தர் தம் மகத்துவம்**' எனும் அருள் விருந்தாகும். அது பின் வருமாறு:-

சித்தர்கள் பூரண ஞானமார்க்கத்திலிருந்து ஒதுங்கி மூகிலிகை முதற் பல சாதனங்களால் காயத்தைத்திரித்து துரியாதீத நிலையையுங்கடந்து மீண்டும் புகுந்த வாசலால் வந்து உலகத்துலாவுவர். எனவே அப்பாலுக்கப்பாலாயும் புகுந்து திரிந்து பாமரமக்களுடனும் பழகி உண்மை நிலையினைப் பல வழியிலும் திருஷ்டாந்தப்படுத்துவர். நாளை நடக்குங்காரியத்தை நன்குணர்ந்து காலத்தைப் பொன் செய்வர். இதனால் அவர்கட்கு உலகபீடைகளில்லை. கண்டபொருளையே கண்டபடி இருப்பர். வாழ்க்கையிலே ஓர் நியதியைக் கடைப்பிடிக்கவேண்டுமென்ற அவசியம் அவர்க்கில்லை; இது தீமை இது நன்மை என்ற பாகுபாடில்லை; இதனால் அவர்கள் தீமையாளர்கள் என்பதுமில்லை; சங்கங்களும் சாவடிகளும் வேண்டுமென்ற பாத்தியமும் இல்லை. ஆனால், அவர்கள் இருக்கும் இடத்தைச் சனங்கள் நாடி வருவதைக் காண்பர். அவ்வண்ணமே அவர்களும்—சித்தர்கள்—நினையாப்பிரகாரம் நடுவூருள் பிரசன்னமாவர்.

அவர்களது அபூர்வ நடமாட்டமும் திவ்விய தரிசனமுமே ஹரி ஜனங்களையும் சரிசெய்யும் அபூர்வ ஔடதமாகும். ஒரு இடத்தில் தோன்றுவர்; பலஇடங்களில் உலாவுவர்; பின் வேறோரிடத்தில் – அதாவது, தங்களுக்கு வாய்த்த அல்லது வழி வகுத்து வைத்த இடத்தில் மறைந்து கொள்வர். காயத்துடனேயே நிட்டை கூடிப் பன்னெடு நாட்களாகப் பரலோக சிதாகாசம் வாசஞ்செய்து பின்பு பூலோகத்துக்கு மீள்வர்.

'மோனமென்பது ஞான வரம்பு' இந்நிலையை அவர்கள் முக்கிய சாதனை செய்து அப்பாலும் அப்பாலுக்கு அப்பாலும் சென்று, இப்பாலும் இப்பாலுக்கு இப்பாலும் புகுந்து புறப்படுவர். இதனால் மோனத்தையும் சிலகால் விலக்கி வாழ்வர். பிறப்பும் இறப்பும் எங்களுக்கு நேருவது ஒருக்காலே. ஆனால், ஆச்சரியம், அவர்கள் உலகசஞ்சாரத்திலிருந்து கொண்டே எத்தனையோ இறப்புகளையும்–பரலோக வாசம், பிறப்புகளையும்–இகலோக வாசம், தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்டிருப்பர். சமாதியடைவதென்பது தங்களைத் தாங்களே நிதர்சனப்படுத்திக் கொள்ளலாகும். நிதர்சனம் என்றால் உருவத்தை மறைந்துக் கொண்டு தாங்கள் என்றும் ஒரேபார்வையில் இருந்து கொள்ளலாகும். எல்லார் உள்ளங்களிலும் அத்தகையோர் வசித்து வருதல் அவர்களும் நாங்களும் அடையும் பேரின்பமாகும். இதனைச் சைதன்யம் எனினும் பொருந்தும்.

மேலும் அவர்கள் சிதாகாசத்தில் செறிந்து பரந்து தம்மையறிந்திருத்தல் அவர்கள் அடையும் நித்தியானந்தமாகும். ஆயின் அன்னோர் உலகத்திலே யோனிவாய்ப்பட்டோ படாமலோ உருவத்துடனேவேண்டிய பொழுது வந்துலாவுவரென்பது திடசித்தம். இதை உணர்ந்து எல்லோரும் ஆத்மசாந்தி யடைக!

இவ்வரலாறு யோகி நவநாத சித்தர் அவர்களின் வாழ்க்கைச் சித்திர விபரங்களைச் சுருக்கி எடுத்துக்காட்டும் ஓர் பிரதிவிம்பமாகும். 'குயின்ஸ்பரி'த் தலமாண்பு யாவராலும் நேரில் தரிசித்து அறிய வேண்டியதே. ஈண்டு விரிக்கிற் பெருகும். யாம் கண்டு அநுபவித்த அற்புத ஆனந்தத்தை அனைவரும் காண்க! அநுபவிக்குக!!

# மரியாதை வேண்டும்.

[சரஸன்]

பெரியோர்க்கு மரியாதை செலுத்துதல் என்பது தமிழரிடையேதொன்று தொட்டு ஏற்பட்டதொரு பழக்கம். நமது புராணங்களிலேயும் இதிகாசங்களிலேயும் இதற்குப்பல சான்றுகள் உள்ளன.

இராமாயணத்திலே இராமன் தன் தந்தையிடமும் தாய்மாரிடமும் கொண்டபக்தியும் மரியாதையும் சொல்லிலடங்கா. எல்லோரையும் விட தன்னைக்காட்டுக்கு அனுப்பிய தன் சிற்றன்னை கைகேயியிடம் அவன் காட்டிய மரியாதை பிரமாதம். பிறர் கைகேயியின் துர் எண்ணத்தைக்கண்டு சிரித்து அவளை வெறுத்தபோதும், அவன் மட்டும்மரியாதை தவருது நடந்து கொண்டது, அவனுடைய விவேகத்தைக்காட்டுவதுடன் பெரியோரிடம்நாம்கொள்ள வேண்டிய மரியாதையையும் வலியுறுத்துகின்றது

பாரதக்கதையைத்தான் பார்ப்போம். நியாயத்தைப் புத்திரபாசத்தின் காரணமாய்க் காற்றில் பறக்க விட்ட திருதராஷ்டிரனிடம் தருமன் நடந்துகொண்ட முறை பொன்னெழுத்துக்களினல் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

ஆனல், என்ன துரதிர்ஷ்டம்! இன்று அந்தப்புனிதமான பழக்கம் தேய்ந்து கொண்டு வருகின்றதைப்பார்க்கும் போது, மனம் வேதனைப்படாமல் இருக்க முடியவில்லை பல இடங்களிலே நாம் பார்க்கின்ருேம். சிறியோர்கள் பெரியோர்களிடம் மரியாதைசெலுத்தும் பழக்கத்தையே விட்டொழித்து விட்டார்கள். கண்டபடி பெரியோர்களிடம் வாதம் புரியக்கூடிய தன்மையை அடைந்து விட்டார்கள். பெரியோரைக்கண்டால் வணக்கம் செலுத்த வேண்டும் என்ற முறையே மாறிவருகின்றது.

பல இடங்களிலே நான் பார்த்து வருத்தப் பட்டிருக்கிறேன் தந்தை நின்றபடி ஏதாவது மகனைக் கேட்பார், மகன் ஓய்யாரமாக நாற்காலியிற் சாய்ந்து கொண்டு, அலட்சியமாகப்பதில் சொல்வான். தாய்தன் மகனுக்கும் மகளுக்கும் பயந்துகொண்டு அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வாள். பெற்றமக்கள் பெற்ருேர்க்குப் பணிவிடை செய்யும் நிலைமாறி, மக்களுக்குப் பெற்ருேர் பயந்து கொண்டு சிசுருஷை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

பள்ளிக்குச் சென்றாலும் இதே நிலைதான். ஒருகாலத்திலே மாணவர்கள் தங்கள் ஆசிரியர்மாரிடம் பக்தியும், மரியாதையும் உடையவர்களாய் நடந்து கொண்டார்கள். இன்று நடைமுறையில்உள்ள பழக்கம் விபரீதமானது. ஒருமாணவனை, அவன் தன் வேலைகளைச் சரிவரச்செய்யவில்லை என்றகாரணத்தால் கடியவோ தண்டிக்கவோ முடியாது. அப்படி ஏதாவது நடந்து விட்டால், உடனே மாணவனின் தந்தையிடமிருந்து சீறிக்கொண்டு வரும் கண்டனக்கடிதம் பள்ளித் தலைமையாசிரியருக்கு. மகனும் மகளும் பெற்றோரை மதிப்பதில்லை. தம்பி தமையனை மதிப்பதில்லை. மனைவி கணவனுக்குமரியாதை செலுத்துவதும் குறைந்து வருகின்றது. மாணவன் தன் குருவிடம் மரியாதையுடன் நடந்து கொள்வதில்லை. மொத்தத்திலே சிறியோர் பெரியோரிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற தத்துவமே காலப்போக்கிலே மறைந்துவிடும் போல் இருக்கிறது.

இவ்வளவுக்கும் காரணம் என்ன? சிலர் கூறிவருகிறார்கள், இந்தமேனாட்டுக் கல்விமுறையும் பழக்க வழக்கங்களும் நம்மை அடிமைப்படுத்தி விட்டது தான் என்று. ஆனால் அது தவறு என்று நான் கூறுகின்றேன். மேனாட்டார் எங்களுடைய ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் விட்டு விடும்படி பிரசாரம் செய்யவில்லை. கூறப்போனால், கடல் கடந்து வந்தும், அவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களைக் கைவிடாது நடந்து கொண்டதன் மூலம் நாமும் நம்முடைய பழக்கங்களைக் கைவிடக்கூடாது என்று செயலில்காட்டியது போலத்தான் கொள்ளவேண்டும்.

பின்பு, நாம் நமது பண்பாட்டை மறந்து விட்டதற்கு வேறு என்ன காரணம்? நாம் நமது புராதனப் பண்பாட்டைப்பற்றிச் சிந்திக்காமல் வாழ்க்கையில் நமக்குப் பயனளிக்கமுடியாத சிலபழக்கங்களைக் காரணமில்லாமல் கைக்கொண்டதால் தான். அதுமட்டுமல்ல நமது புராணங்களையும் இதிகாசங்களையும் படிக்காததும் பிறர் கூறக்கேட்காததும் தான்.

நமது புராண இதிகாசங்களிலுள்ள உயர்ந்த தத்துவங்களும் பொருள் செறிந்த கருத்துக்களும் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய,

# தர்மமா?

எடுப்பு.

இன்னும் சோதித்தல் தர்மமா?-எளியேன் படும்
இன்னல்கள் கண்டும் வர்மமா? [இன்னும்]

தொடுப்பு.

மண்ணிலும் பொன்னிலும் மடந்தையர் கண்ணிலும்
மயங்கித் திரிந்தலைந்து வாழ்வு பாழான பின்பு
[இன்னும்]

முடிப்பு.

தப்பிதம் பலகோடி தமியனேன் புரிந்தாலும்
தாங்குவ தன்றோ நின் தீங்கரு ணைக்கழகு?
அப்பனே! நீவெறுத்தால் இப்புவி யில்கதி யார்?
அடியார்க் கிரங்கும் ஞான வடிவே சற்குருநாதா!
[இன்னும்]

"பரமஹம்ஸதாஸன்"

---

முற்பக்கத் தொடர்ச்சி:-

பொருள்களும் உலகில் வேறெந்த நூல்களிலும் காணமுடியாது. நம்முடைய புராதன தெய்வ நூல்களிலில்லாத கருத்துக்களை வேறு எந்த நூல்களிலுந் தேடமுடியாது. நம் புராண நூல்களைப்படித்துத் தெளியாத ஒருவன், பிறதேச நூல்களைப் படித்து விட்டதாய் எண்ணிக்கொண்டு இறுமாந்திருப்பது நகைக்கத்தக்க விஷயமாகும்; பரிதாபப் படவேண்டிய விஷயமுமாகும்!

இப்போது காணக் குதிரைக் கொம்பாய் இருக்கும் மரியாதை நம்புராணங்களைப் படிக்காததால் ஏற்பட்ட கோளாறே தவிர வேறல்ல. இந்த மரியாதைக் குறைவு ஏற்பட்டது அறியாமையினுல்தான் என்றும் கூறலாம். இதைப் போக்கவேண்டுமானுல் புராண நூல்களைப்படிக்கவும் பிறர் கூறக்கேட்கவும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கு வீட்டிலே புராணக்கதைகளைச் சுவாரஸ்யமாகச் சொல்ல வேண்டும். இம்மாதிரிக்கதைகள் சொல்லப்படும் இடங்களுக்கு அவர்களை அழைத்துப்போய் அவைகளைக் கேட்கச் செய்ய வேண்டும். இம்மாதிரி இளமையில் குழந்தைகளுக்குப் பழக்கமேற்பட்டால் (புராணங்களைக் கேட்கவும் படிக்கவும்) பின்னுல், அன்பு, தயை, பக்தி, விசுவாசம், நியாயம், தர்மம், பெரியோரிடம் மரியாதை முதலிய நற்குணங்களும் நல்லொழுக்கங்களும், தானுகஏற்பட்டு விடும். உலகின் எந்தச்சக்தியும் அவற்றை மாற்றிவிட முடியாது.

# சன்மார்க்கமே நீடித்து வாழும் தன்மையது.

(தென்னுபிரிக்கா, டர்பன். திரு. ச. மு. பிள்ளையவர்கள்)

பழைய காலத்திலிருந்து அநுஷ்டானத்திலிருந்து வரும் சிரேஷ்டமான ஆசாரங்களையெல்லாம் அசட்டை செய்வதும், அவைகள் சூழ்ச்சிகள் என்று சந்தேகப்படுவதும், இக்காலத்து ஜனங்களின் இயல்பாகி விட்டன.

நிகழும் சகாப்தத்தில் ஜனங்களுக்கு எதிலும் சந்தேக புத்தி ஏற்பட்டிருப்பதால் தான், சன்மார்க்க ஆசாரங்களிலெல்லாம் அவர்களுக்கு நம்பிக்கைகுறைந்துவருகிறது. பிரத்தியட்சமாக நிரூபித்துக் காட்டினுலொழிய ஜனங்களுக்குச் சந்தேக நிவர்த்தியாவதில்லை. ஆகவே, சிந்தனு சக்திவாய்ந்தவர்களும், மேதாவிகளுமானவர்களிற் பலர், பண்டைக்காலந் தொட்டுச் சமூகத்தில் அநுஷ்டானத்திலிருந்துவரும் சன்மார்க்க ஆசாரங்களையெல்லாம், முட்டாள் பழக்கம் என்று நினைக்கத் தொடங்கியிருக்கிருர்கள்.

பண்டைக்காலத்திலிருந்த புத்திசாலிகள், பாமரமக்களைக் கட்டுப்படுத்துவதற்காக யுக்தி செய்து ஆசாரங்களை ஏற்படுத்திஞர்களென்று மேற்சொன்ன மேதாவிகள் கருதுகின்றனர். ஆனுல். உண்மை என்னவென்பதைச் சற்றுக் கவனிப்போம்.

சமூகத்தார் ஆமோதிப்பதனுலேதான் சன்மார்க்க குணங்களுக்குமதிப்பு ஏற்பட்டிருப்பதாக எண்ணுவது பிசகு. சமூகம் சிலாகித்தாலும் சரி; சிலாகிக்காவிடினுஞ் சரி, சன்மார்க்க குணங்களின் மேன்மை, மேன்மையேயாகும். சன்மார்க்கக் குணத்தைச்சிலாகிக்கும் மனிதர் ஒருவர்கூட சமூகத்தில் இல்லாமல் இருப்பினும், குணத்தின் விசேஷம் குன்ருது. எது உத்திருஷ்டமான குணமோ அதைத்தான் சமூகம்சிலாகிக்கிறதேயொழிய, சமூகம்சிலாகிப்பதால் குணத்திற்கு மேன்மை ஏற்படுவதில்லை.

ஒருநாள் ஒரு வாலிபர் என்னை அணுகி, "பிரிட்டிஷ் மாஜிமன்னரான எட்டாவது எட்வர்ட் ஸ்ரீமதி சிம்ஸனை மணம்செய்து கொண்டதில் குணக்குறைவு என்ன இருக்கிறது? அவர் பெரிய தவறு செய்து விட்டதாக இப்போதும் பலரால் வம்பளக்கப்படுகிறதே! ஆதலால், சில ஆசாரங்களைத் தானே சன்மார்க்கமெனச் சமூகம் நிர்ணயம் செய்திருக்கிறது. அந்த ஏற்பாட்டிற்குமாருக

நடந்து கொண்டால், அந்த நடத்தையில் சன்மார்க்கத்திற்கு இழிவு ஒன்றுமில்லாமலிருப்பினும், அதைச்சமூகம் கண்டிக்கிறதல்லவா?" என்று கேட்டார்.

அந்த வாலிபர் மேலும் சில பிரச்சனைகளைக் கிளப்பினர். "ஒரு மனிதனுக்குச், சமூக ஆசாரத்திற்கு விரோதமாக நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. அவனுடைய நடத்தையில் சன்மார்க்க ஈனம் எதுவும் இல்லாமல் இருப்பினும், அவனைச் சமூகம் பிரஷ்டனாகக் கருதுகிறதல்லவா? இந்தக்கட்டுப்பாடு மானிடர்களுக்கு மாத்திரந்தான் ஏற்பட்டிருக்கின்றது மிருகங்களுக்கு இவ்விதமான கட்டுப்பாடுகள் ஒன்றுமில்லை. அவைகள் யதேச்சையாக அவைகளிஷ்டம் போல் நடந்துகொள்ளுகின்றன. அவ்விதம் நடந்துகொள்வதனால் மிருகவர்க்கத்துக்குப்பேராபத்து ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லையே!'' என்றும் வினவினர்.

மேற்சொன்ன கேள்விகளும், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களும் பதில் சொல்லுவதற்குச் சிரமமானவைதான். ஆனால், பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

சமூகத்தில் சம்பிரதாய ஆசாரங்களென்றும் சன்மார்க்க ஆசாரங்களென்றும் இருவகையான பழக்கங்கள் இருந்துவருகின்றன என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விருவகையான ஆசாரங்களும் சமூகக் கட்டுப்பாட்டின் பலத்தினால் நிலைத்திருக்கின்றன என்னும் வாதத்தை ஒப்புக்கொள்ளவே முடியாது. ஏனெனில், மனிதன் முட்டாள் தனமாக ஒரு ஆசாரத்தை உண்டாக்கி வைக்கலாம். ஆனால், அப்பேர்ப்பட்ட ஆசாரங்கள் வெகு காலம் நீடித்திருக்கவே முடியாது. நல்லவைதான் ஜீவித்திருக்க முடியும். அசத்துகள் தன்னுள்ளே இயற்கையாக அமைந்திருக்கும் வேர்ப்புழுவின் நாசத்தினாலே, தானாகவே அழிந்து மறைந்து போகும்

ஆகையால், மானிடர்களின் யுக்தியினாலே மாத்திரம் ஏற்படுத்திய ஆசாரங்கள், சன்மார்க்க சம்பந்தமில்லாமல் இருக்குமாயின், வெகுகாலம் ஜீவித்திருக்கவே முடியாதென்பது இயற்கை விதியாகும்.

சம்பிரதாய ஆசாரங்களெல்லாம் தவறானவைகளானால், அவைகள் இத்தனை நூற்றாண்டுகளாக அழியாமலிருப்பதன் காரணமென்ன?

சூழ்ச்சியினாலும் யுக்தியினாலும் செய்த ஏற்பாடுகளை இத்தனை நூற்றாண்டுகளாக, இவ்வளவு கோடி கோடி ஜனங்களுமா ஏமாந்து ஏற்று இருப்பார்கள்! ஒரு மனிதன் ஓரிரண்டு மனிதர்களை ஏமாற்ற முடியும். மானிட சமூகத்தையே எல்லாக்காலமும் ஏமாற்றமுடியுமா என்பதைக்குறித்து தீர்க்கமாக ஆலோசித்துப்பார்க்க வேண்டும். ஆகையினால் சன்மார்க்க ஆசாரங்களும், சமூக ஆசாரங்களும் அவையவைகளின் குண விசேஷத்தினாலேயே ஏற்படுத்தப்பட்டவையென்று கொள்ள வேண்டும்.

மானிடவர்க்கத்திற்கும், மிருகவர்க்கத்திற்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் அமைந்திருப்பதைக் கவனிக்கவேண்டும். மிருகங்கள் ஒரு காரியத்தைச் செய்யும் போது, அந்தக் காரியத்தின் சாதக பாதகங்களைக் குறித்து யோசிப்பதில்லை. ஒருகாரியத்தைப் பிசகாக செய்து விட்டதற்காக மனவருத்தப் படுவதில்லை. ஆனால், மானிடர்கள் அப்படியல்ல. எந்தக்காரியத்தைச் செய்தாலும் அதன் பலனுக்காகச் சந்தோஷமோ துக்கமோ படுகின்றனர். இதுதான் வித்தியாசம்.

## சந்தா நேயர்களுக்கு

*நேயர்கள் கடிதம் எழுதும் போதும் சந்தா அனுப்பும்போதும் விலாசமாற்றம் செய்யும்போதும் தங்கள் தங்கள் சந்தா இலக்கங்களைக் குறிப்பிட வேண்டுகிறோம். ஆத்மஜோதி அனுப்பும் போது உங்கள் சந்தா இலக்கமும் விலாசத்தின் முன்னால் குறிப்பிடப்படுகிறது. அதனைக் குறித்து வைத்துக்கொள்ளவும்.*


*சமயகுரவர்*

**நால்வர் படங்கள்**

இல்லங்களைச் சிறப்பிப்பது பூஜைக்கும் தியானத்திற்கும் உகந்தது.

*ரவிவர்மாகலர்* *பேரூர் நால்வர் மடாலய வெளியீடு.*

பிரதி 1க்கு ரூபா 1-50
தபாற் செலவு வேறு

வியாபாரிகட்கு கழிவு உண்டு
கிடைக்குமிடம்:-

**சரவண அச்சகம்.**
**நாவலப்பிட்டி.**

Regd. at the G. P. O. as a News Paper H. G. 59-300

## கிளிநொச்சியில் சமயசாத்திரவகுப்பு.

கிளிநொச்சி சாந்தி நிலையத்தில் (கிளிநொச்சி கொலனி ரோட்டில்) சமயசாத்திர—நீதிநூல் வகுப்புகள் திருநெறிக்கழகத்தாரால் நடாத்தப்பட்டு வருகின்றன. சிவத்திரு க. வடிவேற் **சுவாமிகள்** மேற்படி வகுப்புக்களை நடாத்தி வருகிறார். திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் மாலை 6—30 மணி தொடக்கம் இரவு 9-30 மணிவரை வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் ஆகிய நூல்களும் சனி, ஞாயிறு காலை மணி 10, 12க்குள்ளும் பி. ப. 3, 4½க்கிடையிலும் நீதிநூல் வகுப்புக்களும் தேவார வகுப்பும் நடாத்தப்பட்டு வருகின்றன. அதன் அயல்கிராமங்களில் உள்ளார் சென்று அவ்வகுப்புக்களில் சேர்ந்துபடித்து சமய அறிவை வளர்த்துக்கொள்ளலாம். மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கு இது மிக அநுகூலமானது.

## திருமந்திர விளக்கம்.

தமிழ்ப் பேரறிஞரும் சைவப்பெரியாருமாகிய காலஞ்சென்ற திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் வேண்டுகோட்கிணங்கி யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்கள் பத்தாவது சைவத் திருமுறையாகப் போற்றப்படும் திருமந்திரமென்னும் அறிவுக் கடலுள் ஆழ்ந்து பல ஒப்பற்ற முத்துக்களைத் தெரிந்தெடுத்து அவற்றிற்குத் தமது சொந்த அநுபவத்தின் துணைகொண்டு விரிவுரை தந்தனர். அத்திருமந்திரக் கட்டுரைகள் நூல்வடிவுபெற்று விக்கிரம ஆண்டு ஆவணி மாசத்தில் முதலாவது பதிப்பாக வெளிவந்தன, முதற்பதிப்புப் பிரதிகள் மூன்று மாசத்துள் விற்பனையாகிவிடவே தமிழ் நாட்டில் பலர் நூல் கிடைக்காமையினால் வருந்தினர், இரண்டாம் பதிப்பைச் சுத்தானந்தப் பதிப்பகத்தார் நல்லமுறையில் பதிப்பித்து அன்பர்களின் குறையை நிவர்த்தி செய்து உள்ளார்கள்.

**விலை ரூபா இரண்டரை** தபாற்செலவு தனி

வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவு உண்டு.

**வேண்டுவோர்;**

"ஆத்மஜோதி நிலையம்" நாவலப்பிட்டி. (சிலோன்)

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சரவண அச்சகம் நாவலப்பிட்டி